# பொதுக்காலம் 15ஆம் வாரம் - ஞாயிறு

# முதல் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் போல, பன்மடங்கு பலன் தந்திடவும், நல்வாழ்க்கையை எதிர்கொண்டிடவும் இன்றைய ஞாயிறு வழிபாடு நமக்கு அழைப்பு விடுக்கிறது.

சிறு விதைகளே விருட்சங்களாகிறது. விதையிடம் ஏற்படும் நல் மாற்றமே விண்ணை நோக்கிய மரம் ஆகும். நம்முள்ளும் நேர்மறையான மாற்றங்களை ஏற்றுக் கொண்டு பிரதிபலிக்கும் போது வாழ்க்கை இறைவனை நோக்கிப் பயணிக்கிறது.

இன்றைய முதல் வாசகத்தில், இறைவனின் வாயிலிருந்து புறப்படும் ஒவ்வொரு வார்த்தையும் வல்லமை வாய்ந்தது என்பதை எசாயா இறைவாக்கினரின் நூல் எடுத்துரைக்கிறது. ஒரே வார்த்தையாலே மன்னாவும் பொழியப்பட்டது. ஒரே வார்த்தையாலே சோதோம், கொமோரா மீது கந்தகமும் நெருப்பும் பொழியப்பட்டது. நாமும் நம் வார்த்தைகளை வாழ்த்துவதற்கே பிரயோகிப்போம். வஞ்சகத்தை மேற்கொள்ள பயன்படுத்த வேண்டாம்.

இன்றைய நற்செய்தியில், விதைப்பவர் உவமையை இயேசு கிறிஸ்து விளக்குகிறார். விதைப்பவர் ஒருவர் தான். ஆனால் விதைகள் அடையும் போராட்டக்களம் வேறுபட்டதே. விதைகள் இவ்வுலகில் முளைத்து எழுவதற்கு பல்வேறு போராட்டங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பறவைகள், பாறைகள், முட்செடிகள் போன்ற போராட்டங்களைத் தாண்டியே விதைகள் நல் நிலத்தில் வாழ முற்பட வேண்டும். நாமும் இறைப் பாதையில் பயணிக்கையில், ஏராளமான தடைகளை, நெருக்கடிகளைத் தாண்டி பலன் கொடுப்போம். வாழ்க்கையை முழுமையாக்க, தடைகளைக் கவனமாய்க் கடந்து, போராட்டத்தில் வெல்வோம்.

## இறைமக்களின் மன்றாட்டுகள்:

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. ‘வார்த்தைகள் வல்லமையுடையது’ என்றவரே எம் இறைவா!

எம் திரு அவையை வழிநடத்தும் திரு அவைத் தலைவர் மற்றும் பணியாளர்கள் நற்செய்தியை மகிழ்வோடு எடுத்துரைக்கவும், தங்களின் நேரிய, எளிய வாழ்வால் உம் வார்த்தைகளை வாழ்வாக்கி, சான்று பகர வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. மனம் மாறுங்கள் என்றவரே எம் இறைவா!

எம் நாட்டை ஆளும் ஆட்சியாளர்கள், அதிகாரிகள், சரியான பாதையில் நாட்டை வழிநடத்தவும், பொருளாதார சீர்கேடுகள், சமூக சீர்கேடுகள் தலைதூக்க அனுமதிக்காமல், வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தவும், சுயநலத்தால் சூறையாடிய இயற்கையைப் பேணவும், நோயின் தாக்கத்திற்கு சரியான வழியைக் கண்டறிந்து, செயல்படுத்த நல்லறிவு தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. நல்ல நிலத்தில் விழுந்த விதையாய் வாழ அழைப்பவரே எம் இறைவா!

உம் வழியைப் பின்பற்றவும், வார்த்தைகளைச் செயல்படுத்தவும், தடையாய் உள்ள எங்கள் பாவங்களையும் செயல்களையும் களைந்து, உம் நற்செய்தியைப் பறைசாற்ற வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. கருணை மழையே எம் இறைவா!

எம் பகுதியில் தென்மேற்கு பருவமழை பொழியவும், நீர்நிலைகள் நிரம்பி, வேளாண்மை சிறக்கவும், பொருளாதாரம் ஏற்றம் பெறவும், குடும்பங்களில் அமைதி, மகிழ்ச்சி பெருகவும், இதயத்தின் வேண்டுதல்கள் நிறைவேறவும் வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**நன்றி: திருமதி ஜோஸ்பின் சாந்தா லாரன்ஸ், பாவூர்சத்திரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com